1987 நவம்பர் 16]

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நெடுஞ்சாலைகளில் அலங்கார வளைவுகள்

134—(*வினா எண் 14913) திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புறங்களில் நகர நெடுஞ்சாலைகளில் அலங்கார வளைவுகள் கட்டி போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் இச்செயலை தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) இதனால் விபத்துக்கள் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, (அ) இது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இப்போது இல்லை.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புற நெடுஞ்சாலைகளில், அலங்கார வளைவுகளினால் கடந்த 3 ஆண்டுகளில் சாலை விபத்துக்கள் ஏதும் நிகழவில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அலங்கார வளைவுகள் கட்டுவதன் காரணமாக அழகான சாலைகளில் பள்ளங்கள் ஏற்படுகின்றன. அந்தப் பள்ளங்களை தூர்க்காத காரணத்தால் இரவு நேரங்களில் மோட்டார் பைக், மொபட், சைக்கிள் போன்றவற்றில் வருபவர்களும், இன்னும் சில நேரங்களில் பேருந்துகள் கூட விபத்துக்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இது போன்ற தகவல் வரவில்லையென்று சொல்வது முற்றிலும் மாறானது என்றே எண்ணுகிறேன். இருந்தாலும் மேலும் விபத்துக்கள் இதனால் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். அதற்கு பொலிட்டிகல் டெசிஷன் என்று சொல்வார்களே, அதைப் போல எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் சேர்ந்து, இணைந்து ஒரு முடிவை எடுத்து அரசு அதனைத் தீர்மானமாக வடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் இந்த வளைவுகளினால் பல்வேறு விபத்துக்கள் ஏற்படுவதை நானே நேரடியாகக் கண்டிருக்கிறேன். அதைப் போல உரிமங்கள் பெறுவதைக்கூட பெறாமலே அரசியல் கட்சிகள் இவற்றை அமைத்து விடுகின்றன. இந்த நிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விபத்துக்கள் ரெக்கார்டில் வராமல் இருந்திருக்கலாம். எங்காவது சில விபத்துக்கள் நடந்திருக்கலாம். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார் என்று கருதுகிறேன். ஆனால் பல இடங்களில் மிக அதிகமாக செலவழித்துப் போடப்படுகிற ரோடுகள் அரசியல் கட்சிகள் பெரும்பாலும்—மற்ற நிறுவனங்களும் செய்கின்றன, நடத்துகிற கூட்டங்களுக்காக இந்த அலங்கார வளைவுகள் அமைக்கப்படுகிற போது பாதிக்கப்படுகின்றன. பல இடங்களில் இது போன்ற நிலைமை இருக்கிறது. எனவே அரசியல் கட்சிகள் அத்தனையும் சேர்ந்து ஒரு தீர்மானமாகப் போடுவதற்கு நிச்சயமாக இந்த அரசுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்தத் தயக்கமும் இல்லை. ஆனால் தீர்மானம் போட்ட பிறகு அதனைக் கடைப்பிடிப்பதற்கு எந்த அரசியல் கட்சியும் தயாராக இல்லை என்பது தான் கடந்த கால அனுபவம். எல்லா தலைவர்களும் அதை ஒப்புக் கொள்கிறார்கள், நியாயம் என்று பேசுகிறார்கள், சட்டமன்றத்தில் நியாயம் என்று சொல்கிறார்கள். ஆனால் வெளியே போன பிறகு அதைக் கண்டிப்பதற்கோ அல்லது அவர்களுடைய கட்சியினர் செய்தால் அதைத் தடுப்பதற்கோ யாரும் தயாராக இல்லை. இப்படிப் பல்வேறு பிரச்சினைகளில் பார்த்தாகிவிட்டது. எனவே இதை எல்லோரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டால் அதைச் செயல்படுத்துவதற்கு முடியும் என்று கருதுகிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும் அவற்றிடமிருந்து அனுமதி பெறவேண்டும். நெடுஞ்சாலையாக இருந்தால் பொதுப் பணித் துறையின் அனுமதியைப் பெற வேண்டும். அப்படி அனுமதியைப் பெற்று எந்தக் கட்சிகள் அந்த அலங்கார வளைவுகளை ஏற்படுத்துகின்றனவோ, அவை சாலைக்கு ஏதேனும் சேதம் விளைவித்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றிய அனுமதியை நகராட்சியாக இருந்தால் நகராட்சியிடமிருந்து பெற வேண்டும். மாநகராட்சியாக இருந்தால், மாநகராட்சியிடம் இருந்து பெற வேண்டும். காவல் துறையிலேயிருந்தும் இதற்கு ஒப்புதல் பெறவேண்டும். இவ்வளவும் இருக்கிறது. ஆனால் எந்த அரசியல் கட்சியின் மீது எப்படி நடவடிக்கை எடுப்பது? இதற்கு ஏதாவது ஒரு வழி வகையை நீங்களே சொல்ல வேண்டும். நடவடிக்கை எடுத்தால், உடனே பழி வாங்குகிறார்கள் என்று சொல்கிற நிலைமை வருகிறது. நாம் இப்போது கூட பல இடங்களிலே பார்க்கிறோம். எங்காவது நாம் ஊருக்குப் போகிறபோது, எந்த வழியாக

1987 நவம்பர் 16]

அந்த ஊருக்குப் போக வேண்டும் என்பதைப் பற்றி போர்டு போடப்பட்டிருக்கும். உள்ளூரிலே இருப்பவர்களுக்குப் பிரச்சினை இல்லை. வெளியூரிலேயிருந்து வரக்கூடியவர்களுக்கு எந்த ஊருக்குப் போகிறது என்று தெரியாது. அரசியல் கட்சியினுடைய போஸ்டர்கள் அத்தனையும் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள போர்டிலே தான் ஒட்டப்படுகிறது. எனவே இதற்கு எல்லாம் நாம் எங்கே போய்ச் சொல்வது என்று தெரியவில்லை. இதற்கு நடவடிக்கை எடுத்தால் எங்கள் மீது பழிவாங்கப்படுகிறது என்று இங்கே கூட ஒத்திவைப்புத் தீர்மானமே வருகிறது. எனவே இதற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து ஏதாவது ஒரு முடிவுக்கு வந்துவிட்டால், இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்.

மகாபலிபுரத்தில் ஒலி—ஒளிக் காட்சி

135— (*வினா எண். 5788) திரு. செ. செம்மலை: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகாபலிபுரத்தில் ஒலி—ஒளிக் காட்சி நடத்த மத்திய தொல் பொருள் துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் ஒப்புதல் இதுவரை கிடைக்கப்பெறாததால் அமையவிருக்கும் திறந்த வெளி அரும்பொருட்காட்சி வளாகத்திலேயே ஒலி-ஒளிக் காட்சி நடத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

பழமுதிர்ச்சோலை முருகன் கோயிலை செப்பனிடுதல்

136— (*வினா எண் 6903) திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், பழமுதிர்ச்சோலை முருகன் கோவிலை செப்பனிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1962-ல் புதிதாக கட்டப்பட்டுள்ள அழகர்மலையில் முருகன் கோயில் நல்ல நிலையிலேயே உள்ளது. திருப்பணி செய்யப்பட வேண்டிய அவசியம் ஏதுமில்லை.